டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 22.07.2026 புதன்கிழமை | பக்கங்கள் 32 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 029 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பாக பாக்கேஜ் குடிநீர் தொடர்பான பயிற்சி

புது தில்லி, ஜூலை 22

இந்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய தர நிர்ணய அமைவனம் (BIS), தொழில்துறைகளிடையே தர விழிப்புணர்வு, தயாரிப்பு பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திறன் மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.




அதன் ஒரு பகுதியாக, பிஐஎஸ் சென்னை அலுவலகம், பேக்கேஜ் குடிநீர் குறித்த இரண்டு நாள் பயிற்சியை 16.07.26, 17.07.26 ஆகிய தேதிகளில் சென்னை தரமணியில் உள்ள அலுவலகத்தில் நடத்தியது. இந்தப் பயிற்சியில் பேக்கேஜ் குடிநீர் உற்பத்தி தொழில் துறைகளைச் சேர்ந்த தரக் கட்டுப்பாட்டு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியின் நோக்கங்கள் குறித்து பிஐஎஸ் சென்னை அலுவலகத்தின் மூத்த இயக்குனரும், தலைவருமான எஸ்.டி. தயானந்த் விளக்கமளித்தார். போக்குவரத்து மற்றும் சேமிப்பின் போது பேக்கேஜ் குடிநீர் பாட்டில்கள் பல்வேறு சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு உட்படக்கூடும் என்றும், இருப்பினும் அவ்வாறான சூழ்நிலைகள் தயாரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் எந்த வகையிலும் பாதிக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப அமர்வுகளை பிஐஎஸ் சென்னை அலுவலகத்தின் துணை இயக்குனர் அஜய் சந்தேல் நடத்தினார். இந்த அமர்வுகளில், ஐஎஸ் 14543 தரநிலையின் விதிமுறைகள், தயாரிப்பு கையேடு, ஆய்வு மற்றும் சோதனைத் திட்டம், பிஐஎஸ் தயாரிப்பு சான்றளிப்பு திட்டத்தின் கீழ் பின்பற்ற வேண்டிய குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் பதிவுகள் பராமரிப்பு தேவைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

பயிற்சியின் ஒரு பகுதியாக, பங்கேற்பாளர்கள் சென்னை தரமணியில் உள்ள பிஐஎஸ் தென் மண்டல ஆய்வகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு, ஐஎஸ் 14543-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள முக்கிய மற்றும் அத்தியாவசிய அளவுருக்களுக்கான சோதனைகள் குறித்து தென் மண்டல ஆய்வக குழுவினர் செயல்முறை விளக்கங்களை வழங்கினர்.

பயிற்சியின் நிறைவு அமர்வில் பிஐஎஸ் சென்னை அலுவலகத்தின் இயக்குனர் முனிநாராயணா பங்கேற்று, பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காரிப் பருவ பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

மதுரை, ஜுலை 22

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், அவர்களை விவசாயத்தில் நிலை பெறச் செய்யவும் வேளாண்மைத் துறை மூலம் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு 2026 -27 ஆம் ஆண்டு காரிப் பருவத்திற்கு, விவசாயிகள் நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.745 பிரீமியம் தொகை செலுத்த வேண்டும்.

விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளி காற்று, காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு, பயிர் அறுவடை பரிசோதனையின் அடிப்படையில் ஒரு ஏக்கருக்கு ரூ.37,250 வரை பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப் படும். நடப்பு காரிப் பருவத்தில் நெல் (குறுவை) பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய ஜுலை 31 ஆம் தேதி கடைசி நாளாகும்.

வங்கியில் பயிர்க் கடன் பெறும் மற்றும் பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் தங்களது விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் பின்வரும் ஆவணங் களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

முன்மொழிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பயிர் சாகுபடி அடங்கல், வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல், நில உரிமை பட்டா நகல், மேற்கண்ட ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் இ-சேவை மையங்கள்) மூலம் உரிய பிரீமியம் தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்யுமாறு அலங்கா நல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# காய்கறி மகத்துவ மையத்தில் கிஷான் கோஸ்திஸ் நடந்தது



திண்டுக்கல், ஜுலை 22

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் காய்கறி மகத்துவ மையத்தில் விவசாயிகள் மேளா கி ஷான் கோஸ்திஸ் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி ஆலோசனை படி கிறிஸ்க் விஞ்யன் கேந்திர ஆராய்ச்சியாளர் சரவணன், தலைமையில் வேளாண்மை உதவி அலுவலர் முருகானந்தம், முன்னிலையில் விவசாயிகள் மேளா பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சி யாளர் மக்காச்சோள பயிர் பாதுகாப்பு முறைகள் படைப்புழு தாக்குதலை சரி செய்வது போன்ற பாதுகாப்பு முறைகளைப் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பட்டு வளர்ச்சி அலுவலர் பத்மநாபன் பட்டுபுழு வளர்ப்பு அதன் சாகுபடி முறை பற்றி விளக்கி கூறினார். வேளாண்மை வணிகத் துறை உதவி அலுவலர் மூர்த்தி, துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் குளிர்பதன கிட்டங்கியை பயன்படுத்தி பயன் பெறலாம் என கூறினார். கால்நடை பராமரிப்பு துறை உதவி அலுவலர் வனிதா, கால்நடைகளுக்கு ஏற்படும் பூச்சி நோய் மற்றும் அதன் கட்டுப்பாடு மற்றும் ஆடு வளர்ப்பு பற்றி கூறினார். முன்னோடி விவசாயி முத்தையா, விவசாயிகளுக்கு பூச்சி நோய் கட்டுப்பாடு பற்றிய காலண்டரை வழங்கினார். மற்றும் இயற்கை சாணம் கோமியத்தில் செய்யப்பட்ட தைலம் விபூதி சாம்பிராணி விளக்கு போன்ற பொருட்களை காண்பித்தார்.

தோட்டக்கலை உதவி அலுவலர் வினிதா, காய்கறி மகத்துவ மையத்தில் தேவையான நாற்றுகளை பதிந்து பெற்று கொள்ள லாம் என கூறினார். தோட்டக்கலை பயிலும் மாணவர்கள் தேன், முருங்கை பொடி, சூஸ், ஊறுகாய், ஜாம், உலர் கருப்பு திராட்சை போன்ற பொருட்களை காண்பித்து விவசாயிகளிடம் விற்பனை செய்தனர்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா விளக்கு பொறி வைத்தல் சோலார் லைட் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்துவது பற்றி எடுத்துக் கூறினார். விவசாயிகள் தாங்கள் உழவன் செயலியில் பட்டறிவு பயணம், உர பொருட்கள் மானியத்தில் வாங்க முன்பதிவு செய்து பயன்பெறலாம் என உதவி தொழில்நுட்ப மேலாளர் பொன் தமிழரசு கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் அருண்குமார் இயற்கை விவசாயம் செய்தல் மற்றும் அதன் சிறப்பு அம்சங்கள் பற்றி விரிவாக கூறினார்.

# நவீன சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



தேனி, ஜுலை 22

தேனி மாவட்டம், உத்தம பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோகிலாபுரம் கிராமத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமத் தங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுடன் இணைந்து களப்பணிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர்.

இதன் ஒரு பகுதியாக, மாணவர்கள் விவசாயிகளுடன் வயல்வெளி களில் நேரடியாக நெல் நடவுப் பணிகளில் ஈடுபட்டதுடன், புதிய நெல் ரகங்கள் மற்றும் அவற்றின் சிறப்பம்சங்கள் குறித்து விளக்க மளித்தனர். மேலும், நெல் சாகுபடியில் உர மேலாண்மை, களை மேலாண்மை, நீர் மேலாண்மை உள்ளிட்ட நவீன சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடி, தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்துகொண்டனர். இந்த களப்பயிற்சி மூலம் மாணவர்களும் விவசாயிகளிடமிருந்து பல்வேறு நடைமுறை அனுபவங்களைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள் சாண்டியோ சாஜி, ஆனந்தமரி ராஜ், செல்லத்துரை, கஜேந்திரன், வஜில் மற்றும் நந்தகோபால கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் மற்றும் வேளாண்மை அலுவலர் சு.லாவண்யா ஆகியோரின் வழிகாட்டு தலின்படி, களப்பயிற்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

# சொர்ணவாரி பருவத்திற்கு பயிர் காப்பீடு செய்ய வரும் 31 வரை அவகாசம்


திருவள்ளூர், ஜுலை 22

நோய் மற்றும் பூச்சி தாக்குதலால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், விவசாயிகள் இழப்பீடு பெறுவதற்கு ஏதுவாக, வரும் 31ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்யும்படி, வேளாண் துறை அறிவுறுத்தி உள்ளது. திருவள்ளூர் வட்டாரத்தில், 2780 ஏக்கர் பரப்பளவில், சொர்ணவாரி பருவத்திற்கு நெல் பயிரிடப் பட்டுள்ளது.

தட்பவெப்பசூழல் காரணமாக, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகரித்து, நெற்பயிர்களில் வளர்ச்சி பாதித்து உள்ளது. எனவே, விவசாயிகள் உரிய இழப்பீடு பெறுவதற்கு ஏதுவாக, பயிர் காப்பீடு செய்து கொள்ளும்படி, வேளாண் துறை அறிவுறுத்தி உள்ளது. இத்திட்டத்தில் வருவாய் கிராம அளவில் குறுவை நெல் பயிருக்கு பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.615-ஐ, வரும் 31ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

எனவே காரிப் பருவத்தில் சாகுபடி மேற்கொண்டுள்ள கடன் பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, மற்றும் கடன் பெறா விவசாயிகள் பொது சேவை மையங்களிலோ, இ-சேவை மையங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் காப்பீடு செய்யலாம். விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசலிக்கான அடங்கல் இ-அடங்கல் விதைப்பு சான்றிதழ், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரீமியம் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டம் குறித்த கூடுதல் விபரங்களுக்கு பயிர் காப்பீடு www.pmfby.gov.in இணையதள முகவரி அல்லது அருகிலுள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளையோ அல்லது இத்திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனத்தையோ அணுகுமாறு விவசாய பெருமக்களை திருவள்ளூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் தெய்வேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மண்புழு உரத்தின் நன்மைகள்



**அறிமுகம்**

இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வரும் இரசாயன உரங்களின் பயன்பாடு மண்ணின் இயற்கை வளத்தையும், சுற்றுச்சூழலையும் பாதிக்கிறது.

இதற்கு மாற்றாக இயற்கை முறையில் தயாரிக்கப்படும் மண்புழு உரம் ஒரு சிறந்த இயற்கை உரமாகும். மண்புழுக்கள் கரிமக் கழிவுகளை சிதைத்து உருவாக்கும் உயர்தர இயற்கை உரமே மண்புழு உரம் எனப்படுகிறது. இது தாவர வளர்ச்சிக்கும், மண்வளத்தைப் பாதுகாப்பதற்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

**மண்புழு உரம் என்றால் என்ன?**

மண்புழுக்கள் மாட்டுசாணம், பயிர் கழிவுகள், இலைகள் மற்றும் பிற கரிமக் கழிவுகளை உண்டு, அவற்றைச் செரிமானம் செய்து வெளியேற்றும் கழிவுப் பொருளே மண்புழு உரமாகும். இதில் தாவரங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் பயனுள்ள நுண்ணுயிரிகள் நிறைந்துள்ளன.

**மண்புழு உரத்தின் முக்கிய நன்மைகள்**

**1. மண்வளத்தை அதிகரிக்கிறது**

மண்புழு உரத்தில் தாவரங்களுக்கு தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் உள்ளன. இவை மண்ணின் வளத்தை அதிகரித்து தாவரங் களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகின்றன.

**2. தாவர வளர்ச்சியை மேம்படுத்துகிறது**

மண்புழு உரத்தில் உள்ள ஊட்டச்சத்துக்கள் தாவரங்களால் எளிதில் உறிஞ்சப்படுகின்றன. இதனால் விதை முளைப்பு, வேர் வளர்ச்சி, இலை வளர்ச்சி மற்றும் பூக்கும் திறன் அதிகரிக்கிறது.

### 3. மண்ணின் அமைப்பை மேம்படுத்துகிறது

மண்புழு உரம் மண்ணின் அமைப்பை மேம்படுத்தி, மண்ணை மென்மையாகவும் காற்றோட்டமாகவும் மாற்றுகிறது. இதனால் தாவர வேர்கள் நன்கு பரவி வளர முடிகிறது.

### 4. நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரிக்கிறது

மண்புழு உரம் மண்ணில் ஈரப்பதத்தைத் தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது. இதனால் அடிக்கடி நீர்ப்பாசனம் செய்ய வேண்டிய அவசியம் குறைகிறது.

### 5. பயனுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது

மண்புழு உரத்தில் பல பயனுள்ள நுண்ணுயிரிகள் காணப்படுகின்றன. இவை மண்ணில் உள்ள கரிமப்பொருட்களை சிதைத்து, தாவரங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை எளிதில் கிடைக்கச் செய்கின்றன.

### 6. இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கிறது

மண்புழு உரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்கலாம். இதனால் மண், நீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு குறைகிறது.

### 7. சுற்றுச்சூழலுக்கு உகந்தது

மண்புழு உரம் தயாரிப்பில் வேளாண் கழிவுகள் மற்றும் வீட்டு கரிமக் கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கழிவுகள் பயனுள்ள உரமாக மாற்றப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாக்கப் படுகிறது.

### 8. வேளாண் கழிவுகளை பயனுள்ளதாக மாற்றுகிறது

பயிர் கழிவுகள், உலர்ந்த இலைகள், காய்கறிக் கழிவுகள் மற்றும் மாட்டு சாணம் போன்றவற்றை மண்புழு உரமாக மாற்றலாம். இதனால் கழிவு மேலாண்மை எளிதாகிறது.

### 9. பயிர்களின் மகசூலை அதிகரிக்கிறது

மண்புழு உரம் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதால், பயிர்களின் வளர்ச்சியும் மகசூலும் அதிகரிக்கிறது. இது விவசாயிகளின் வருமானத்தையும் உயர்த்த உதவுகிறது.

### 10. விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் தருகிறது

மண்புழு உரத்தை தயாரித்து விவசாயிகள் தங்களது நிலங்களில் பயன்படுத்துவதோடு, அதிகப்படியான உரத்தை விற்பனை செய்தும் கூடுதல் வருமானம் பெறலாம்.

### 11. நிலையான விவசாயத்திற்கு உதவுகிறது

மண்புழு உரம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து, மண்ணின் உற்பத்தித் திறனை நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்த உதவுகிறது. எனவே, இது நிலையான மற்றும் இயற்கை விவசாயத்தின் முக்கிய அங்கமாகும்.

**முடிவுரை** : மண்புழு உரம் மண்ணின் வளத்தை அதிகரிப்பது மட்டுமின்றி, தாவர வளர்ச்சி, பயிர் மகசூல் மற்றும் சுற்றுச்சூழல் பாது காப்பிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண் கழிவுகளை பயனுள்ள இயற்கை உரமாக மாற்றுவதன் மூலம் மாசுபாட்டைக் குறைக்கவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் கட்டுப் படுத்தவும் முடியும். எனவே, ஆரோக்கியமான மண், பாதுகாப் பான உணவு மற்றும் நிலையான விவசாயத்திற்காக மண்புழு உரத்தை அதிகளவில் பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

தகவல் : ***சி. பிரசாத் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்), நான்காம் ஆண்டு மாணவர்கள், கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை–625 532.***



# திடக்கழிவு மேலாண்மை சீர்குலைவதால் அதிகரிக்கும் மீத்தேன் வாயு?

புவிவெப்ப மயமாதலுக்கு தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறும் கார்பன்-டை ஆக்ஸைடு மட்டுமே முக்கிய காரணம் என்ற கருத்து பொதுவாக நிலவுகிறது. ஆனால் அதுமட்டுமல்ல, நகரங்களில் குப்பைக் கிடங்குகளில் கொட்டப்படும் உயிர் கழிவுகளிலிருந்து, (BIO WASTE) வெளி யேறும் மீத்தேன் (METHANE) காலநிலை மாற்றத்தை விரைவு




படுத்தும் முக்கிய காரணமாக உருவெடுத்துள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளுவோம்.

குப்பை குவியல் தீவைத்து எரிப்பு



**மீத்தேனுக்கு ஏன் முக்கியத் துவம்?**

1) இது வெப்ப மயமாதலுக்கு காரணமான பசுமை இல்ல வாயுக்களில் ஒன்று.

2) வளிமண்டல வெப்பத்தை அதிகமாகத் தக்க வைக்கும்திறன் கொண்டது.

3) உயிர்கழிவுகளில் ஆக்ஸிஜன் இல்லாமல் அழுகும் போது இந்த வாயு உருவாகிறது.

4) குப்பை கிடங்கில் தீ விபத்து ஏற்பட முக்கிய காரணம் இந்த வாயு (சமீப நாட்களில் மதுரை வெள்ளக்கல் குப்பை கிடங்கில் ஏற்பட்ட தீவிபத்தால் 20 கி.மீ சுற்றளவில் புகை மூட்டம் ஏற்பட்டது).

**மீத்தேனைக் கட்டுபடுத்த எளிய வழிகள்**

1) குப்பைகளை தரம் பிரித்து தனித்தனியாக தொட்டிகளில் (மக்கும் குப்பை, மக்காத குப்பை) என இடுதல்

2) உயிர்கழிவுகளை தனியாக உரமாக மாற்றுதல்

3) உணவுக்கழிவுகளை நெகிழி பைகளில் அடைத்து சாலை களில் வீசுவதை தவிர்த்தல்

4) கழிவுகளை 4 வகையாக பிரித்து வழங்குதல்

5) குடியிருப்புகளில் சமூக உரமாக்கல் மையம் (COMMIUNITY COMPOSTING) அமைத்தல்

6) திறந்த வெளியில் குப்பை கொட்டுவதை தவிர்த்தல்

7) நகராட்சி மட்டத்தில் கழிவுகளை கண்காணித்தல்

8) ஒவ்வொரு வார்டிலும் ( ரீசியூநு நிபுறீவீசி நிபுயூம்) திட்டம் உருவாக்கம்

**ஏன் மீத்தேன் ஆபத்தானது? தெரியுமா?**

வெப்பத்தை வளிமண்டலத்தில் தக்க வைக்கும் திறன் மீத்தேனுக்கு பல மடங்கு அதிகம். எனவே குறைந்த அளவில் வெளியேறினாலும் புவிவெப்பமயமாதலுக்கு அதன் தாக்கம் மிக அதிகமாகும்.

இதுமட்டுமல்ல, எளிதில் தீப்பற்றக்கூடிய வாயு என்பதால் சர்வ சாதாரணமாக கோடைக்காலங்களில் குப்பை கிடங்குகளில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. இதனால் நச்சு புகை மண்டல மாக வளிமண்டலம் மாறி விடும். இதனால் காற்று மாசு ஏற்படும்.

எனவே வீடுகளிலிருந்து குப்பைகளை தனித்தனியாக பிரித்து தூய்மை பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். வீடு களிலிருந்து தொடங்கி அறிவியல் பூர்வமான திடக்கழிவு மேலாண்மையை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் தான் திடக்கழிவு மேலாண்மை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கோவில்பட்டி 'இது எங்கள் பூமி' விவசாய கதை ஆசிரியர் கோ.சுரேஷ்குமாருக்கு பாராட்டு விழா!

விருதுநகர், ஜுலை 22

மதுரை விராட்டிபத்தில் செயல்பட்டு வரும் அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் கருத்தரங்கம் மற்றும் 25வது பொதுக்குழுக் கூட்டம், விருதுநகர் மாவட்டம், சிவகாசி தாலுகா, காக்கிவாடன்பட்டி கிராமத்தில் உள்ள வெங்கடசாமி எலும்பு முறிவு வைத்தியசாலை வளாகத்தில் நடந்தது.



தமிழ்நாடு விவசாய புதிய உத்திகள், கருவிகள் கண்டுபிடிப்பு, மூலிகை செடிகள் விளக்கம் உட்பட பிற வகை இனங்கள் தொடர்பாக செயல்பட்டு வரும் அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் கண்டுபிடிப்பாளர்களுக்கான கருத்தரங்கம், புதிய உத்திகள் மற்றும் மூலிகைச் செடிகள் குறித்த விளக்க கண்காட்சி மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி முதலில் நடந்தது. தலைவர் வெங்கடசாமி அனைவரையும் வரவேற்றார்.

சேவா விவேகானந்தன் தலைமை தாங்கி தொடக்க உரை நிகழ்த்தினார். பிற்பகல் அமர்வில் கோவில்பட்டி மைக்ரோகிரின் வளர்ப்பு செயல்பாட்டாளர் மற்றும் விவசாய கதை எழுத்தாளர் கோ.சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள 'இது எங்கள் பூமி' விவசாய நூலின் 27 கதைகள் அறிமுகத்தை நம்வழி வேளாண்மை இதழில் ஆசிரியர் பெ.விவேகானந்தன் அறிமுகம் செய்து வாழ்த்தி, பாராட்டி பேசினார்.

புளியங்குடி இயற்கை வேளாண் ஆசான் அந்தோணிச்சாமி புத்தகத்தை அறிமுகம் செய்து பாராட்டினார். பல உறுப்பினர்கள் புத்தகத்தை பெற்றுக் கொண்டனர். இதன் மொத்த தொகையை சங்கத்தின் செயல்பாட்டிற்கு அன்பளிப்பாக வழங்கி நன்றி கூறினார், இது எங்கள் பூமி விவசாய புத்தக ஆசிரியர் கோவில்பட்டி கோ. சுரேஷ்குமார்.

அதை தொடர்ந்து சங்கத்தின் 25வது பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. செயலாளர் காயத்திரி பிரசாத் கலந்து கொண்டு 2025-2026 ஆண்டு செயல்பாடுகளை வாசித்தார்.

வரவு, செலவு கணக்கை பொருளாளர் சுந்தராஜ் வாசித்து ஒப்புதல் பெற்றார். புதிய உறுப்பினர் சேர்க்கை, புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு நடந்தது.

அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் மதுரை மேலக்கல் முருகேசன், ராஜு, நகரம் மாரியப்பன், பெரம்பலூர் கனத்தூர் மோகன கிருஷ்ணன், திருவில்லிபுத்தூர் வைத்திலிங்கபுரம் தமிழ்மணி, நவீன அடுப்பு வடிவமைப்பாளர் சென்னை தியாகராஜ், மதுரை பசுமலை சுவாமிநாதன் உட்பட உள்ளூர் விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha
POWERGRID
BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விவசாயி சங்கரின் தக்கைப்பூண்டு வெற்றிக்கதை



மதுரை, ஜுலை 22

தக்கைப்பூண்டு தாவரவியல் பெயர் செஸ்பானியா அக்கு லியாட்டா (Sesbania aculeate). இது மண்ணின் வளத்தை அதிகரிக்கவும், உவர் நிலங்களைச் சீரமைக்கவும் பயன்படும் ஒரு பசும்தழை உரம் (Green Manure) ஆகும். என்னுடைய பெயர் சங்கர் தஃபெ சிவாஜிராவ் காமாட்சிபுரம், மேலமாத்தூர் கிராமம் ஆகும். திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் மீனாட்சி சுந்தரம், ATMA வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பி.லதா 2025-26ம் ஆண்டிற்கு செயல்விளக்கத்திடல் அமைப்பதற்கு தக்கைப்பூண்டு 20 கிலோ மற்றும் 25 கிலோ மண்புழு உரம் கொடுத்தார்கள். கொடுக்கப்பட்ட தக்கைப்பூண்டு விதைகளை மேலமாத்தூரில் உள்ள என்னுடைய நிலத்தில் (சர்வே நம்பர் 163/3A, 163/4B) நன்கு உழவு செய்து விதைத்தேன். விதைத்த 40 முதல் 60 நாட்டகளில் பூக்கும் தருணத்தில் உழவு செய்யப்பட்டு மக்க வைக்கப்பட்டது. மேலும் வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜனை வேர்களில் நிலைநிறுத்தி மண்ணுக்கு இயற்கை உரமாக மாற்றுகிறது. அது போக இது காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, வேர்களில் உள்ள முடிச்சுகள் மூலம் மண்ணில் நிலைநிறுத்துகிறது. இப்பயிரை பூக்கும் தருணத்தில் மண்ணில் மடக்கி உழததால், மண்ணின் கரிம சத்துக்கள் அதிகரித்து உற்பத்தித் திறன் பல மடங்கு பெருகுகிறது. இதன் வேகமான வளர்ச்சி, வயலில் தேவையில்லாத களைகள் முளைப்பதைத் தடுக்கிறது. இதன் அடர்ந்த வேர்கள் மண்மை இறுக்கமாகப் பிடித்து, மண் அரிப்பைத் தடுக்க உதவுகின்றன.

இவ்வாறாக உவர் மற்றும் களர் நிலங்களில் இத்தக்கைப் பூண்டானது நன்கு வளர்ந்து, மண்ணின் காரத்தன்மையைக் குறைக்க உதவுகிறது. இத்தொழில்நுட்பங்களை வட்டார தொழில் நுட்ப மேலாளர் பி.லதா கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி செயல் விளக்கத்திடல் அமைத்து கொடுத்தார்கள். அட்மா திட்டத்தின் மூலம் பெற்ற தக்கைப்பூண்டு செயல் விளக்கத்திடல் என்னுடைய வயலில் அமையப்பெற்று நெல் மகசூல் அதிகரிக்க உதவியது.

# நெல் விதைகளின் தரத்தை அறிந்து விதைப்பு செய்தல் அவசியம்!

திருவண்ணாமலை, ஜூலை 22

விவசாயிகள் தாங்கள் பயன்படுத்தும் விதைகளை பரிசோதனை செய்து தரமான விதை என்பதை உறுதி செய்து கொண்டபின் விதைப்பு எடுக்க வேண்டும். குறைந்த செலவில் அதிக வகசூல் பெற விதை பரிசோதனை செய்த பின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப் பதையும் விதைகளில் பிற இரக கலவன் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்க லாம். மேலும் நெல்லில் தரமான விதை என்பது முளைப்புதிறன் 80%, புறத்தூய்மை 98%, ஈரப்பதம் 13% இருக்க வேண்டும்.

நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் தரும் இரகங் களை சாகுபடிக்கு பயன்படுத்தினால் அதிக லாபம் பெறலாம். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள சான்று மற்றும் ஆதரா நிலை, நெல் இரகங்கள் CO 51, CO 55, RNR 15048, I.W.PONNI, ADT(R)45, ADT 37, ADT 53, ADT 57, ADT 59, இரகங்கள் இருப்பில் உள்ளன. விவசாயிகள் தங்களுக்கு தேவையான நெல் இரங்களை வாங்கி பயன் பெறலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றை பரிசோதனைசெய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூல மாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர் இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப் பிட்ட விண்ணப்ப டிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதை பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.பத்மா கேட்டுக் கொண்டார்.

# ரோவர் வேளாண்மைக் கல்லூரியில் மாணவர்களுக்கான ஊக்க உரை

பெரம்பலூர், ஜூலை 22

பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் 20.07.26 திங்கட்கிழமை அன்று வேளாண் மாணவர்களுக்கான ஊக்க உரை நடைபெற்றது. ரோவர் கல்விக் குழுமத்தின் மேலாண் தலைவர் முனைவர் கி.வரதராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக் வரதராஜன் முன்னிலை வகித்தார்.



இந்நிகழ்ச்சியில் சீனாவின் நான் ஜிங் வனவியல் பல்கலைக் கழகத்தின் மூங்கில் ஆராய்ச்சி நிறுவனத்தில் உயிரித் தொழில் நுட்பப் பேராசிரியராக பணியாற்றி வரும் முனைவர் முத்துசாமி ராமகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, வெளிநாடுகளில் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் உரையாற்றினார். தொடர்ந்து நடைபெற்ற கேள்வி—பதில் நிகழ்வில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று, தங்களது சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன் மற்றும் இயக்குநர் முனைவர் வஹாப் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியை கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் பரமேஸ்வரி மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப் பாளர் இராமதாஸ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். கல்லூரி நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய் திருந்தனர். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவ, மாணவியர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# நிலக்கடலை பயிரில் தரமான விதை உற்பத்தி

ஒரு ஏக்கருக்கு தேவையான 80 கிலோ நிலக்கடலை விதைகளை 30 சென்டி மீட்டருக்கு 10 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைத்து ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். ஒரே மாதிரியான விதைகளை பயன்படுத்தி சரியான இடைவெளியில் விதைத்தால் பயிர் எண்ணிக்கை சீராக காணப்படும். இதனால் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.



நிலக்கடலை விதை மூலமும், மண் மூலமும் பரவும் வேர் அழுகல், தண்டு அழுகல் மற்றும் இலைப்புள்ளி நோய்களை கட்டுப்படுத்த உயிரியல் பூஞ்சாண மருந்து டிரைக்கோ டெர்மா விரிடிணை கொண்டு விதை நேர்த்தி செய்திட வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் விதையை விதைப்புக்கு முன் ஈரப்படுத்திய பின் பூஞ்சாணத்தை அதன் மீது தூவி கலந்து பயன்படுத்த வேண்டும். மேலும் விதைகளை ரைசோபியம் 2 கிலோ மற்றும் பாஸ்போ பாக்டீரியா 2 கிலோ உயிர் உரங்களுடன் 25 கிலோ எரு மற்றும் மணலுடன் கலந்து விதைக்க வேண்டும்.

ஒரு எக்டருக்கு 12.5 டன் நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரத்தினை இட்டு நிலத்தினை 4, 5 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். பேரூட்ட சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்து உரங்களை மண் ஆய்வு பரிந்துரையின் படியும் அல்லது பொது பரிந்துரையான எக்டருக்கு 10, 10, 45 கிலோ என்ற அளவிலும் 200 கிலோ ஜிப்சத்தினை விதை விதைப்பதற்கு முன் அடி உரமாக இட வேண்டும்.

போராக்ஸ் 10 கிலோ மற்றும் நுண்ணூட்ட சத்து 12.5 கிலோவினை 50 கிலோ மணலுடன் கலந்து விதைத்த உடன் நிலத்தின் மேல் இட வேண்டும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை அடி உரத்துடன் இடுவதால் நூற்புழுக்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க முடியும். இரண்டாவது கைக்களை எடுத்த பின்பு மண்ணில் ஈரம் 10-12 சதவீதம் இருக்கும் போது 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். விதைத்த 40-45ம் நாள் மண் அணைப்பதன் மூலம் களைகள் மண்ணிற்குள் செல்வது தடுக்கப்படும். மேலும் காய்கள் திறட்சியாக இருக்க உதவுகிறது.

நல்ல வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளைப் பெறுவதற்கு பல ஊட்டச்சத்துகளை கலந்து தெளிக்க வேண்டும். இந்த கலவையை தயாரிக்க டிஏபி 25 கிலோ, அம்மோனியம் சல்பேட் 1 கிலோ மற்றும் போராக்ஸ் 0.5 கிலோவினை 37 லிட்டர் தண்ணீரில் கலந்து ஓர் இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் காலை இந்த கலவையை வடிகட்டினால் 32 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும்.

இதனை 468 லிட்டர் தண்ணீர் சேர்த்து 500 லிட்டர் அளவில் தயார் செய்து 350 மில்லி பிளானோபிக்ஸ் கலந்து விதைத்த 25 மற்றும் 35ம் நாட்களில் இலை வழி தெளிக்க வேண்டும் என இராமநாதபுரம் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார் தெரிவித்துள்ளார்.

# பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்

திருவள்ளூர், ஜுலை 22

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரத்தில் தற்சமயம் சொர்ணவாரி சாகுபடி நடைபெற்று வருகிறது. சொர்ணவாரி பருவ நெல் பயிரானது தூர்கட்டும் நிலையிலிருந்து பூக்கும் நிலை வரை உள்ளது. சொர்ணவாரி பருவ நெல் வயல்களில் பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் தாக்கம் பரவலாக காணப்படுகிறது.

## Symptoms (அறிகுறிகள்)

இந்நோயின் அறிகுறிகளாக நுனியில் இருந்து இலைகள் கருகி இலையின் விளிம்பில் இருந்து உள்பக்கமாக மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்தில் வெளிறி காணப்படும். இந்நோயின் அதிகபட்சமாக இலைகள் முழுவதும் கருகி நார்நாராக பிரிந்து விடும். இந்நோயினை கண்டறிய பாதிக்கப்பட்ட இலையை கிள்ளி கண்ணாடி டம்ளரில் நீர் நிரப்பி உள்ளே வைக்கவும். இலையின் கீழ்ப்பக்கம் (கிள்ளிய பகுதியிலிருந்து) மங்கலான திரவம் நீரில் கலப்பதை காணலாம். இந்த எளிய பரிசோதனை மூலம் பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் தாக்கத்தை கண்டறியலாம்.

## Protection Methods (பாதுகாக்கும் முறை)

பேஸில்லஸ் சப்டிலிஸ் (அ) சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ் 1 கிலோ மற்றும் 10 கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள்மாலை ஊற வைத்து மறுநாள் வடிகட்டி விடவேண்டும். வடிகட்டிய நீரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் தெளித்திட இந்நோயினை கட்டுப்படுத்திடலாம் அல்லது ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ரா சைக்ளின் 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் தெளித்து இந் நோயினை கட்டுப்படுத்திடலாம். பேஸில்லஸ் சப்டிலிஸ் காக்களூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில்78 கிலோ இருப்பு வைக்கப் பட்டுள்ளது. ஒரு கிலோ 180 ரூபாய் விலைக்கு விற்பனைக்குள்ளது. விவசாயிகள் உடன் வாங்கி பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்தகவலை திருவள்ளூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ந.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தோட்டக்கலைத் துறையில்ஸ்மார்ட் விவசாயம் சாதிப்பது என்ன : மேம்பட்ட முறையான ஆய்வு

தோட்டக்கலை என்பது உலகளாவிய விவசாயத்தின் மிக வேகமாக வளர்ந்து வரும் மற்றும் பொருளாதார ரீதியாக மிக முக்கியமான துறைகளில் ஒன்றாகும். இது உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், கிராமப்புற வாழ்வாதாரங்கள் மற்றும் விவசாய வர்த்தகம் ஆகியவற்றிற்கு கணிசமாகப் பங்களிக்கிறது. இது பழங்கள், காய்கறிகள், பூக்கள், தோட்டப் பயிர்கள், மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்கள், மற்றும் அலங்காரச்செடி இனங்கள் ஆகியவற்றின் சாகுபடியை உள்ளடக்கியது. இவை அனைத்தும் சமச்சீர் உணவு மற்றும் நிலையான விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாதவை.

உலகளவில், அதிகரித்து வரும் மக்கள்தொகை வளர்ச்சி, விரைவான நகரமயமாக்கல், சுருங்கி வரும் சாகுபடி நிலம், காலநிலை மாற்றம், நீர் பற்றாக்குறை, தொழிலாளர் பற்றாக்குறை, மற்றும் உயர்தரமான, பாதுகாப்பான மற்றும் கண்டறியக்கூடிய விளை பொருட்களுக்கான நுகர்வோர் தேவை அதிகரிப்பு ஆகியவை வழக்கமான தோட்டக்கலை உற்பத்தி முறைகளுக்கு குறிப்பிடத்தக்க சவால்களை உருவாக்கியுள்ளன. இதன் விளைவாக, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் திறமையான வளப் பயன்பாட்டை உறுதி செய்யும் அதே வேளையில் உற்பத்தித்திறனை மேம்படுத்தக்கூடிய புதுமையான தொழில்நுட்பங்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. தோட்டக்கலை உற்பத்தி அமைப்புகளில் மேம்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், இந்த சவால்களை எதிர்கொள்ளும் ஒரு புரட்சிகரமான அணுகுமுறையாக ஸ்மார்ட் விவசாயம் உருவெடுத்துள்ளது. இது நிகழ்நேரக் கண்காணிப்பு, முன்கணிப்புப் பகுப்பாய்வு மற்றும் தானியங்கி முடிவெடுத்தல் ஆகியவற்றைச் சாத்தியமாக்குவதற்காக, பொருட்கள் வழியிலான இணையம் (IoT), செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரக் கற்றல் (ML), ஆழ்நிலைக் கற்றல், ரோபோட்டிக்ஸ், ஆளில்லா வான்வழி வாகனங்கள் (UAVs), தொலை உணர்வு, புவியியல் தகவல் அமைப்புகள் (GIS), உலகளாவிய இருப்பிட அமைப்புகள் (GPS), மேகக் கணினிச் செயல்பாடு, பெருந்தரவுப் பகுப்பாய்வு மற்றும் துல்லியமான விவசாயம் ஆகியவற்றை ஒருங் கிணைக்கிறது. இந்தத் தொழில்நுட்பங்கள் நீர்ப்பாசனம், உரப் பாசனம், பயிர் ஊட்டச்சத்து, பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு, பசுமைக்குடில் காலநிலை கட்டுப்பாடு, விளைச்சல் முன்கணிப்பு

மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தர மதிப்பீடு ஆகியவற்றின் துல்லியமான நிர்வாகத்தை எளிதாக்குகின்றன. இதன் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல், சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் பயிரின் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைச் சாத்தியமாக்குகின்றன.

உலகளவில், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இரண்டிலும் திறன்மிகு தோட்டக்கலையின் பயன்பாடு வேகமாக விரிவடைந்து வருகிறது.

நெதர்லாந்து, அமெரிக்கா, இஸ்ரேல், ஜப்பான், சீனா, ஆஸ்திரேலியா மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகள், துல்லியமான தொழில்நுட்பங்கள், தானியங்கி பசுமைக்குடில்கள், ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் முடிவெடுக்கும் ஆதரவு அமைப்புகளை வணிகரீதியான தோட்டக்கலை உற்பத்தியில் வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளன. இந்தப் புத்தாக்கங்கள் வளப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தி, தொழிலாளர் தேவைகளை உகந்த தாக்கி, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறனை அதிகரித்து, விநியோகச் சங்கிலி மேலாண்மையை வலுப்படுத்தியுள்ளன. மேலும், செங்குத்து விவசாயம் (Vertical farming), ஹைட்ரோபோனிக்ஸ் (Hydroponics), ஏரோபோனிக்ஸ் (Aeroponics), டிஜிட்டல் ட்வின்ஸ் (Digital twins), டிஜிட்டல் கணக்கு பேரேடு (Blockchain) அடிப்படையிலான தகவலறிதல் மற்றும் தானியங்கி ரோபோட்டிக் அமைப்புகள் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், உயர் மதிப்புள்ள தோட்டக்கலை உற்பத்தி மற்றும் நகர்ப்புற விவசாயத்தின் எதிர்காலத்தை மறுவடிவமைத்து வருகின்றன.

உலகிலேயே பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்வதில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. தோட்டக்கலைத் துறையானது விவசாய வளர்ச்சி, ஊட்டச்சத்து பாதுகாப்பு, ஏற்றுமதி வருவாய் மற்றும் விவசாயிகளின் வருமானம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலர்கள், தோட்டப் பயிர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்களின் சாகுபடி மூலம், விவசாயத் துறையின் மொத்த மதிப்பு கூட்டலுக்கு (GVA) இத்துறை கணிசமான பங்களிப்பை அளிப்பதோடு, லட்சக்கணக்கான சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஆதரவளிக்கிறது. 'தோட்டக்கலைக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்' (MIDH), 'டிஜிட்டல் விவசாயத் திட்டம்', 'தேசிய தோட்டக்கலை வாரியம்' (NHB) மற்றும் 'துல்லிய விவசாயத் திட்டங்கள்' போன்ற அரசின் முன்னெடுப்புகள்; டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறை, நுண் நீர்ப்பாசனம்

மற்றும் உணரி (sensor) சார்ந்த பயிர் மேலாண்மை ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்து வருகின்றன. இருப்பினும், நிலங்கள் சிதறிக் காணப்படுதல், பருவநிலை மாற்றங்கள், நீர் இருப்பு குறைதல் (பற்றாக்குறை), பூச்சி மற்றும் நோய்த்தாக்குதல்கள், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை அணுகுவதில் உள்ள சிரமங்கள் (குறிப்பாக சிறு விவசாயிகளிடம்) போன்ற சவால்களை இந்தியத் தோட்டக்கலைத் துறை தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது.

திறன்மிகு விவசாயத் தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு, தரவு சார்ந்த பயிர் மேலாண்மை, துல்லியமான நீர்ப்பாசனம் மற்றும் உரப்பாசனம், பூச்சிகள் மற்றும் நோய்களை முன்கூட்டியே கண்டறிதல், உகந்த உள்ளீட்டுப் பயன்பாடு, தானியங்கு பசுமைக் குடில் மேலாண்மை மற்றும் மேம்படுத்தப்பட்ட அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் ஆகியவற்றைச் சாத்தியமாக்குவதன் மூலம், இந்தத் தடைகளைத் தாண்டுவதற்கு கணிசமான வாய்ப்புகளை வழங்குகிறது. செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் படமெடுத்தல், ட்ரோன் அடிப்படையிலான கண்காணிப்பு, IoT மூலம் இயங்கும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு, ரோபோட்டிக்ஸ் மற்றும் முன்கணிப்புப் பகுப்பாய்வு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், உற்பத்தி அபாயங்களையும் சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் குறைக்கும் அதே வேளையில், நிலையான தீவிரமயமாக்கலுக்கு ஆதரவளிக்கின்றன. டிஜிட்டல் விவசாயம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், தோட்டக்கலையில் உற்பத்தித்திறன், லாபம், காலநிலை மீள்திறன் மற்றும் உணவுத் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஒரு முக்கியப் பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம், நிலையான விவசாய வளர்ச்சி, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கும் இது பங்களிக்கும்.

## செயல்பாடுகள்

### பொருட்கள் வழியிலான இணையம் (IoT)

பொருட்கள் வழியிலான இணையம் (IoT), வயல் மற்றும் பசுமைக் குடில் சூழல்களைத் தொடர்ந்து கண்காணிக்க உணர்விகள், சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்புகளை இணைப்பதன் மூலம், திறன்மிகு தோட்டக்கலையின் முதுகெலும்பாக அமைகிறது. திறன்மிகு உணர்விகள், மண் ஈரப்பதம், வெப்ப நிலை, ஒளிச்செறிவு, மண்ணின் pH, மின் கடத்துத்திறன் (EC), ஊட்டச்சத்து நிலை மற்றும் வானிலை போன்ற முக்கிய அளவுகளை கணக்கிடுகின்றன. இந்தத் தரவுகள் கம்பியில்லா உணர்வி

வலையமைப்புகள் (WSN), Wi- Fi, LoRaWAN, ZigBee அல்லது செல்லுலார் வலையமைப்புகள் வழியாக மேகக்கணினி அடிப்படையிலான தளங்களுக்கு அனுப்பப்பட்டு, நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் தொலைநிலை நிர்வாகத்தைச் சாத்தியமாக்குகின்றன. IoT–ஆல் இயக்கப்படும் தானியங்கி நீர்ப்பாசனம் மற்றும் உரப்பாசன அமைப்புகள், பயிரின் தேவைகளுக்கு ஏற்ப நீரையும் ஊட்டச்சத்துக்களையும் அளித்து, நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துகின்றன, உர இழப்புகளைக் குறைக்கின்றன மற்றும் பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றன.

## செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல்

செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் ஆகியவை, பெருமளவிலான விவசாயத் தரவுகளை, தகவலறிந்த முடிவெடுப்பதற்கு உதவும் செயல்படுத்தக்கூடிய நுண்ணறிவுகளாக மாற்றுகின்றன. ஆழ்நிலைக் கற்றல் மற்றும் கணினிப் பார்வை வழிமுறைகள், பூச்சிகள், நோய்கள், ஊட்டச்சத்துக் குறைபாடுகள் மற்றும் உடலியல் கோளாறுகளை முன்கூட்டியே கண்டறிந்து நோயறிவதற்காக, ஸ்மார்ட்போன்கள், ட்ரோன்கள் மற்றும் களக் கேமராக்களால் எடுக்கப்பட்ட படங்களைப் பகுப்பாய்வு செய்கின்றன. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முன்கணிப்பு மாதிரிகள், வானிலை, மண் மற்றும் பயிர் தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம், பயிர் வளர்ச்சி, பூத்தல், பழ முதிர்ச்சி, மகசூல் திறன் மற்றும் அறுவடை நேரம் ஆகியவற்றை மதிப்பிடுகின்றன. மேலும், செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் முடிவெடுக்கும் ஆதரவு அமைப்புகள், நீர்ப்பாசன அட்டவணை, உரப் பரிந்துரைகள், பயிர்ப் பாதுகாப்பு உத்திகள் மற்றும் விநியோகச் சங்கிலி தளவாடங்களை மேம்படுத்துவதன் மூலம், உற்பத்திச் செலவுகளைக் குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றன.

## துல்லியப்பண்ணையம் (Precision farming)

துல்லியமான வேளாண்மை, விவசாய நிலங்களுக்குள் உள்ள இட மற்றும் கால மாறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, அந்தந்த இடத்திற்கேற்ற பயிர் மேலாண்மையைச் சாத்தியமாக்குகிறது. புவி இருப்பிட அமைப்பு (GPS), புவியியல் தகவல் அமைப்பு (GIS), விளைச்சல் வரைபடமாக்கல் மற்றும் உணர்திறன் வழிகாட்டும் கருவிகள் போன்ற தொழில்நுட்பங்கள், நீர், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் வளர்ச்சி சீராக்கிகளைத் துல்லியமாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கின்றன. மாறுபடும் விகிதத் தொழில்நுட்பம் (VRT), வெவ்வேறு வயல் மண்டலங்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப வேளாண் உள்ளீடுகளைப் பயன்படுத்துகிறது. இதன் மூலம் உள்ளீட்டு விரயத்தைக் குறைத்து, உற்பத்திச் செலவுகளைத்

தாழ்த்தி, சுற்றுச்சூழல் மாசுபாட்டையும் தணிக்கிறது. மேலும், துல்லியமான வேளாண்மை மேம்பட்ட மண் ஆரோக்கிய மேலாண்மை, திறமையான ஊட்டச்சத்துப் பயன்பாடு மற்றும் நிலையான தோட்டக்கலை உற்பத்தி ஆகியவற்றையும் ஆதரிக்கிறது.

### தொலை உணர்வுத்தொழில்நுட்பங்கள் (Remote Sensing)

தொலை உணர்வுத்தொழில்நுட்பங்கள் தோட்டக்கலைப் பயிர்களை விரைவாகவும், சேதமின்றியும், பெரிய அளவிலும் கண்காணிக்க உதவுகின்றன. RGB, மல்டிஸ்பெக்ட்ரல், ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் மற்றும் வெப்ப கேமராக்கள் பொருத்தப்பட்ட ஆளில்லா வான்வழி வாகனங்கள் (UAVs), பயிர் பாதிப்பு, ஊட்டச்சத்துக் குறைபாடுகள், பூச்சித் தாக்குதல்கள், நோய்த் தாக்குதல்கள், நீர்ப் பற்றாக்குறை மற்றும் பயிர்களின் ஆரோக்கியம் ஆகியவற்றைக் கண்டறிய உயர் தெளிவுத்திறன் கொண்ட படங்களைப் பிடிக்கின்றன. செயற்கைக்கோள் அடிப்படையிலான தொலை உணர்வுத் தொழில்நுட்பங்கள், நார்மலைஸ்டு டிஃபரன்ஸ் வெஜிடேன் இன்டெக்ஸ் (NDVI), என்ஹான்ஸ்டு வெஜிடேன் இன்டெக்ஸ் (EVI) மற்றும் பயிர் செயல்திறனின் பிற நிறமாலைக் குறிகாட்டிகள் போன்ற தாவரக் குறியீடுகளின் தொடர்ச்சியான மதிப்பீடுகளை வழங்குவதன் மூலம் ட்ரோன் கண்காணிப்புக்குத் துணை புரிகின்றன. இந்தத் தொழில்நுட்பங்கள் துல்லியமான தெளிப்பு, பயிர் இருப்பு நிலை, மகசூல் மதிப்பீடு, சத்துக்குறைபாடு, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளுக்கும் உதவுகின்றன.

### பாதுகாக்கப்பட்ட சாகுபடி மற்றும் திறன்மிகு பசுமைக்குடில்கள்

திறன்மிகு பசுமைக்குடில் தொழில்நுட்பங்கள், வள நுகர்வைக் குறைக்கும் அதே வேளையில் பயிர் உற்பத்தித்திறனையும் தரத்தையும் அதிகப்படுத்தும் கட்டுப்படுத்தப்பட்ட வளர்ப்புச் சூழல்களை உருவாக்குகின்றன. உணரிகள் வெப்பநிலை, ஈரப்பதம், கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) செறிவு, சூரியக் கதிர்வீச்சு, மண் ஈரப்பதம் மற்றும் ஊட்டச்சத்து அளவுகளைத் தொடர்ந்து கண்காணிக்கின்றன. தானியங்கி கட்டுப்பாட்டு அமைப்புகள், பயிரின் தேவைகளுக்கு ஏற்ப காற்றோட்டம், குளிர், வெப்பம், நீர்ப்பாசனம், உரப்பாசனம், ஒளித்தேவை மற்றும் நிழலத்தேவை ஆகியவற்றை ஒழுங்குபடுத்துகின்றன. ஹைட்ரோபோனிக்ஸ், ஏரோபோனிக்ஸ், அக்வாபோனிக்ஸ் மற்றும் செங்குத்து விவசாயம் போன்ற மேம்பட்ட சாகுபடி முறைகள், நீர் மற்றும் ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை மேலும் மேம்படுத்துவதோடு, குறைந்த சுற்றுச்சூழல் பாதிப்புகளுடன் ஆண்டு முழுவதும் உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களை உற்பத்தி செய்யவும் உதவுகின்றன.

## ரோபோட்டிக்ஸ் மற்றும் ஆட்டோமேசன்

தோட்டக்கலை உற்பத்தியில், ரோபோ தொழில்நுட்பங்கள் தொழிலாளர் பற்றாக்குறையை அதிகளவில் நிவர்த்தி செய்து, செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துகின்றன. தன்னாட்சி ரோபோக்கள், விதைத்தல், நாற்று நடுதல், கத்தரித்தல், களை எடுத்தல், பூச்சிக்கொல்லி தெளித்தல், அறுவடை செய்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்துதல் மற்றும் பொதி செய்தல் உள்ளிட்ட, திரும்பத் திரும்பச் செய்யப்படும் மற்றும் அதிக உழைப்பு தேவைப் படும் பணிகளைச் செய்கின்றன. ரோபோ அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கணினிப் பார்வை, அறுவடை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய செயலாக்கத்தின் போது, துல்லியமாக நல்ல பழங்களை கண்டறிதல், முதிர்ச்சியை மதிப்பிடுதல், தரத்தை வகைப்படுத்துதல் மற்றும் குறைபாடுகளைக் கண்டறிதல் ஆகிய வற்றைச் சாத்தியமாக்குகிறது. தன்னாட்சி டிராக்டர்கள், ரோபோ அறுவடை இயந்திரங்கள் மற்றும் துல்லியமான தெளிப்பான்கள் ஆகியவை செயல்பாட்டுத் துல்லியத்தை மேலும் மேம்படுத்து வதோடு, தொழிலாளர் செலவுகளையும் இரசாயனப் பயன் பாட்டையும் குறைக்கின்றன.

## பெரிய தரவுப்பகுப்பாய்வு மற்றும் மேகக்கணினி செயல்பாடு

திறன்மிகு தோட்டக்கலையானது (Smart horticulture), IoT சென் சார்கள், ட்ரோன்கள், செயற்கைக்கோள்கள், வானிலை நிலை யங்கள், பண்ணை இயந்திரங்கள் மற்றும் மொபைல் செயலிகள் ஆகியவற்றிலிருந்து மிகப்பெரிய தரவுத் தொகுப்புகளை உருவாக்கு கிறது. பெருந்தரவுப் பகுப்பாய்வானது, இந்த பல்வகைப்பட்ட தரவுத் தொகுப்புகளை ஒருங்கிணைத்து, வடிவங்களைக் கண்டறியவும், பயிர் செயல்திறனைக் கணிக்கவும் மற்றும் முன்கணிப்பு முடிவெடுப் பதற்கு ஆதரவளிக்கவும் செய்கிறது. மேகக்கணினி தரவு சேகரிப்பு, சேமிப்பு, செயலாக்கம், காட்சிப்படுத்தல் மற்றும் நிகழ்நேரப் பண்ணை மேலாண்மை ஆகியவற்றிற்காக விரிவாக்கக்கூடிய தளங்களை வழங்குகிறது.

விவசாயிகள் மற்றும் வேளாண் பங்குதாரர்கள், பயிர் நிலை களைக் கண்காணிக்கவும், ஆலோசனை சேவைகளைப் பெறவும், உற்பத்தி அபாயங்களை மதிப்பிடவும், மற்றும் சரியான நேரத்தில் தலையீடுகளைச் செயல்படுத்தவும் மேகக்கணினி செயலாக்கம் அடிப்படையிலான முன்களங்கள் மற்றும் மொபைல் செயலிகளை அணுகலாம். பெருந்தரவுப் பகுப்பாய்வை செயற்கை நுண்ண றிவுடன் ஒருங்கிணைப்பது, துல்லியமான மேலாண்மை, செயல் பாட்டுத் திறன் மற்றும் நிலையான தோட்டக்கலை உற்பத்தி ஆகியவற்றை கணிசமாக மேம்படுத்துகிறது.

**நன்மைகள்**

1) அதிகரித்த பயிர் உற்பத்தித்திறன் மற்றும் தரம்.

2) நீர், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் திறமையான பயன்பாடு.

3) பூச்சிகள் மற்றும் நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து கட்டுப்படுத்துதல்.

4) தானியக்கமாக்கல் மூலம் தொழிலாளர் தேவைகளைக் குறைத்தல்.

5) குறைந்த உற்பத்திச் செலவுகள் மற்றும் அதிக இலாபம்.

6) மேம்படுத்தப்பட்ட தடமறிதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மை.

7) காலநிலை மாறுபாடு மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளைத் தாங்கும் திறனை மேம்படுத்துதல்.

8) நிலையான வள மேலாண்மை மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல்.

**சவால்கள்**

1) டிஜிட்டல் தொழில்நுட்பங்களில் அதிக ஆரம்ப முதலீடு.

2) விவசாயிகளிடையே குறைந்த டிஜிட்டல் எழுத்தறிவு.

3) போதுமான கிராமப்புற இணைய இணைப்பு மற்றும் உள் கட்டமைப்பு இல்லாமை.

**எதிர்கால முன்னோக்குகள்**

எதிர்காலத் திறன்மிகு தோட்டக்கலையானது, செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், டிஜிட்டல் ட்வின்ஸ், எட்ஜ் கம்ப்யூட்டிங், பிளாக்செயின், தன்னாட்சி ட்ரோன்கள் மற்றும் காலநிலைக்கேற்ற முடிவெடுக்கும் ஆதரவு அமைப்புகள் ஆகியவற்றை மேலும் மேலும் ஒருங்கிணைக்கும். பல தரப்பட்ட தரவுகளை முன்கணிப்புப் பகுப்பாய்வுடன் இணைப்பது, தன்னாட்சிப் பயிர் மேலாண்மையைச் சாத்திய மாக்கும், வளப் பயன்பாட்டை மேம்படுத்தும், காலநிலை மாற்றத்திற்கு எதிரான மீள்திறனை அதிகரிக்கும், மேலும் நீடித்த, உயர் மதிப்புள்ள தோட்டக்கலை உற்பத்திக்கு ஆதரவளிக்கும்.

**முடிவுரை**


திறன்மிகு (ஸ்மார்ட்) விவசாயம் என்பது, மேம்பட்ட உணர்திறன், தானியக்கம் மற்றும் அறிவார்ந்த முடிவெடுத்தல் ஆகியவற்றை

ஒருங்கிணைத்து, குறைந்த வளங்களைக் கொண்டு அதிக விளைச்சலை உற்பத்தி செய்வதன் மூலம் தோட்டக்கலையை உருமாற்றுகிறது. இதை ஏற்றுக்கொள்வது, உற்பத்தித்திறன், பயிர்த் தரம், வளப் பயன்பாட்டுத் திறன் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத் தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதோடு, தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் பருவநிலை தொடர்பான சவால்களையும் சமாளிக்கிறது.

மலிவு விலைத் தொழில்நுட்பங்கள், விவசாயிகளுக்கான பயிற்சி, டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் ஆதரவான கொள்கைகளில் தொடர்ச்சியான முதலீடு செய்வது, திறன்மிகு தோட்டக்கலையை ஏற்றுக்கொள்வதை விரைவுபடுத்தி, நிலையான உணவு உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்குப் பங்களிக்கும்.

மேலும் சாகுபடி, பயிர் பாதுகாப்பு, மற்றும் சந்தை விபரங்களுக்கு,

***முனைவர் பெ.முரளி சங்கர், (உதவிப்பேராசிரியர்) நோயியல் துறை, முனைவர் பெ.மு.சுரேஷ், (துணைப்பேராசிரியர்), முனைவர் பா.ராகுல், (உதவிப்பேராசிரியர்), முனைவர் ரா.கவுசல்யா, (உதவிப் பேராசிரியர்) தோட்டக்கலைத் துறை, ஆர்.வி.எஸ். தோட்டக்கலைக் கல்லூரி, செம்பட்டி - 624707, முனைவர் வி.சாதனா, (துணைப் பேராசிரியர்) பூச்சியல் துறை, புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை - 622 303.***




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396